Thalaivaasal
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 10 | thalaivaasaltv@gmail.com | செவ்வாய்க்கிழமை ஒக்ரோபர் 06, 2020

## போலி முகநூல்களுக்கு எதிராக முறையிடுயுங்கள்

முகநூலில் போலி முக நூல் மூலம் அல்லது தேவை யற்ற பிரச்சனைகளை கொடுப் பவர் மீது www.telligp.police.lk என்ற இணைய தளத்தினூ டாக, முறைப்பாடு 03

## கம்பஹா மாவட்டத்தில் 15 பொலிஸ் பிரிவுகளில் ஊரடங்கு

கம்பஹா மாவட்டத்தில் மேலும் 12 பொலிஸ் பிரிவுகளில் இன்று மாலை 6 மணிக்கு நடைமுறைக்கு வரும் வகையில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

கம்பஹா, கிரிண்டிவெல, தோம்பே, பூகோட, வீரகுல, கனேமுள்ள, வெலிவேரிய, மல்வத்முகிரிபிட்டிய, நிட்டம்புவ, மீரிகம, பல்லேவெல மற்றும் யக்கல ஆகிய பொலிஸ் பிரிவுகளிலேயே இவ்வாறு ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் மினுவாங்கொட, திவுலப்பிட்டிய மற்றும் வெயாங்கொட 03

## நிகழ்வுகள், ஒன்றுகூடல்களுக்கு தடை


விருந்துபசாரங்கள் நிகழ்வுகள், கருத்தரங்குகள், திருவிழாக்கள் உள்ளிட்ட நிகழ்வுகள், அறிவுரைகள் (போதனை), கண்காட்சி, மக்கள் ஒன்று கூடல்கள், வருடாந்த உற்சவம் உள்ளிட்ட நிகழ்வுகள், இசை நிகழ்ச்சிகள், பேரணி, மற்றும் பெரஹெர ஆகியனவற்றை நாட்டில் எந்தவொரு பகுதியிலும் மறு அறிவித்தல் வரை நடத்த வேண்டாம் என பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜெனரல் விசேட வைத்தியர் எஸ்.ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொடை பகுதியில் அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களை தொடர்ந்து அதனை கட்டுப்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். 03



## யாழில் தனியார் கல்வி நிறுவனங்கள், சுற்றுலா மையங்களுக்கு பூட்டு

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நாளை புதன்கிழமை நடைமுறைக்கு வரும் வகையில் அனைத்து - தனியார் கல்வி நிலையங்களையும் காலவரையறையின்றி மூடுவது என்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதோடு மக்கள் ஒன்றுகூடுவதைக் கட்டுப்படுத்தும் வகையில் சுற்றுலா மையங்கள், பூங்காக்கள் மற்றும் கடற்கரைகளிலும் அனுமதி மறுப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. 03



## கொரோனா கோரத் தாண்டவம் 48 மணித்தியாலத்தில் 707 பேருக்கு தொற்று

கடந்த 48 மணித்தியாலங்களில் இலங்கையில் 707 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

மினுவாங்கொடையில் தொடங்கிய கொரோனா பரவலால் இதுவரை நாடு முழுவதும் மொத்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 707 ஆக உறுதி செய்யப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் நேற்றைய தினம் 5 ஆம் திகதி 101 நபர்கள் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம்காணப்பட்டிருந்தனர். 03



## புங்குடுதீவு - குறிகட்டுவான் ஊடான படகு சேவைகள் இடைநிறுத்தம்

புங்குடுதீவு - குறிகட்டுவான் ஊடாக தீவு பகுதிகளுக்கான படகு சேவைகள் இன்று தொடக்கம் முற்றாக நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

புங்குடுதீவு ஊடான பொது போக்குவரத்து நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட்டதை தொடர்ந்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது. மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் புங்குடுதீவைச் சேர்ந்த பெண்கள் இருவருவர் வீடு திரும்பிய நிலையில் அவர்களுடன் தொடர்புடையோரை 03

## யாழில் 173 பேரிற்கு பரிசோதனை எவருக்கும் கொரோனா இல்லை

சுய தனிமைப்படுத்தப்படுத்தலுக்கு உள்படுத்தப்பட்டுள்ள 173 பேருக்கு யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் எவருக்கும் கோரோனா தொற்று இல்லை என அறிக்கை கிடைத்துள்ளது.

இந்த தகவலை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர், மருத்துவர் த.சத்தியமூர்த்தி வெளியிட்டுள்ளார். 173 பேரில் கம்பஹாவைச் சேர்ந்த 9 யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் உள்ளடங்குகின்றனர்.

## கொழும்பு மாநகர சபை உத்தியோகத்தர்களுக்கு பிசிஆர் பரிசோதனை



கொழும்பு மாநகர சபை உத்தியோகத்தர்கள் அனைவரும் பிசிஆர் பரிசோதனை முன்னெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. 03

## 101 மாணவர்களுக்கு பரிசோதனை எவருக்கும் தொற்றில்லை

கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட பாடசாலை மாணவி கல்வி கற்கும் பாடசாலையில் 101 மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பி.சீ.ஆர் பரிசோதனையில் அவர்கள் அனைவருக்கும் கொரோனா தொற்று ஏற்படவில்லை என தெரிய வந்துள்ளது.

குறித்த பிரதேசத்திற்கு பொறுப்பான பொது சுகாதார பரிசோதகர் இதனை தெரிவித்துள்ளார்.

## பரீட்சைகள் தொடர்பில் நாளை தீர்மானம்

இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள பீ சீ ஆர் பரிசோதனைகளுக்கு அமைய கல்வி பொது தராதர பத்திர உயர் தர பரீட்சை மற்றும் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை ஆகியவற்றை ஏற்கனவே அறிவித்திருந்த தினத்தில் 03

**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**

# அம்பாறையில் இருவருக்கு கொரோனா



கம்பஹா ஆடை தொழிற்சாலையில் பணியாற்றி விடுமுறை பெற்று அம்பாறை பகுதியில் உள்ள வீடுகளுக்கு வந்த இருவர் கொரோனா தொற்றாளர் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர் என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஜீ. சுகுணன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் இரு கொரோனா தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து இன்று(6) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# களப்பில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு கல்லடி இக்னேசியஸ் விளையாட்டு மைதானத்துக்கு அருகிலுள்ள களப்பில் (நீரோடையில்) பழுதடைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் இன்று (06) மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கல்லடி பாலத்திலுள்ள களப்பில் சடலம் ஒன்று மிதப்பதாக நேற்று மாலை பொலிசாருக்கு பொதுமக்கள் தகவல் வழங்கிளர் இதனையடுத்து குறித்த சடலம் இன்று காலை கல்லடி டச்பார் வீதியிலுள்ள இக்னேசியஸ் விளையாட்டு மைதானத்துக்கு அருகிலுள்ள களப்பில் கரையொதுங்கியுள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் சிவப்பு நிற ரிசேட்டும் நீல நிற டெனிம் ரவுசரும் அணிந்திருந்த சுமார் 30 வயதுடைய ஆண் ஒருவரின் சடலம் அடையாளம் காணபடாத நிலையில் மீட்கப்பட்டது.

குறித்த சடலத்தை மட்டு போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது டன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியாவில் 5 பெண்கள் கைது

வவுனியா பழைய பேருந்து நிலையப்பகுதியில் விபச்சாரத்தில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில், 5 பெண்களை போதைத்தடுப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக போதைத் தடுப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், குறித்த பகுதியில் திடீர் சோதனை நடவடிக்கைகளை நேற்று (திங்கட்கிழமை) மேற்கொண்டுள்ளனர்.

இதன்போதே பழைய பேருந்து நிலையப்பகுதியில், விபசாரத்தில் ஈடுபட முயற்சித்த குற்றச்சாட்டில் 5 பெண்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் குருநாகல், முல்லைத்தீவு, நெடுங்கேணி, விஸ்வமடு ஆகிய பகுதிகளை சேர்ந்த பெண்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த பெண்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வியாழேந்திரனுக்கு புதிய அமைச்சு




பின்தங்கிய கிராம அபிவிருத்தி மற்றும் தேசிய கால்நடை பராமரிப்பு மற்றும் சிறு வர்த்தக பயிர்ச்செய்கை அபிவிருத்தி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சராக சதாசிவம் வியாழேந்திரன் பதவிப்பிரமாணம் செய்துள்ளார்.

இன்று (06) பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் அவர் பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

# எதிர்வரும் 48 மணித்தியாலங்கள் மிகவும் தீர்மானமிக்கது



இலங்கையில் கொரோனா வைரஸ் பரவலின் தற்போதைய நிலைமை குறித்து நாளைய தினமே முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும் என அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் எதிர்வரும் 48 மணித்தியாலங்கள் மிகவும் தீர்மானமிக்கது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இன்றைய தினம் அமைச்சரவை கூட்டத்தின் முடிவுகளை அறிவிக்கும் ஊடக வியலாளர் மாநாட்டில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

நாட்டில் முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனைகளின் முடிவுகள் நாளைய தினம் வெளியாகவுள்ளன.

இந்த நிலையில், குறித்த பரிசோதனை முடிவுகளைக் கொண்டே உயர்தரம் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைகள் தொடர்பான இறுதி தீர்மானத்தை கல்வி அமைச்சு எடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் எதிர்வரும் 48 மணித்தியாலங்கள் மிகவும் தீர்மானமிக்கது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொவிட்-19 பரவலை கட்டுப்படுத்த மக்கள் சுய சுகாதார கட்டுப்பாடுகளை பின்பற்றுதல் அவசியம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நாடளாவிய ரீதியில் ஊரடங்கு பிறப்பித்தல் தொடர்பாக இதுவரை எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லைஎனவும் அவர்தெரிவித்துள்ளார்.

# ஊரடங்கு சட்டத்தை மீறிய 52 பேர் கைது!



இலங்கையில் ஊரடங்கு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 52 பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊரடங்கு சட்டம் அமுலாக்கப்பட்டுள்ள வெயாங்கொடை, திவுலப்பிட்டி, மினுவங்கொடை முதலான பகுதிகளிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

மேலும் பொலிஸ் ஊரடங்கு சட்டத்தை மீறி செயற்படுபவர்களை கைது செய்யும் நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கம்பஹா- திவுலபிடிய பகுதியில் வசித்து வரும் 39 வயதுடைய பெண்ணொருவருக்கு கடந்த 4ஆம் திகதி கொரோனா தொற்று உறுதியானதைத் தொடர்ந்து, அவருடன் தொடர்பை பேணிய பலருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து கொரோனா ரைவஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் குறித்த பகுதிகளிலும் பொலிஸ் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கம்பஹா ரயில் நிலையங்களில் ரயில்கள் நிறுத்தப்படமாட்டாது




வெயங்கொட மற்றும் கம்பஹா ஆகிய ரயில் நிலையங்களில் ரயில்கள் நிறுத்தப்படமாட்டாது என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த திட்டம் உடன் அமுலுக்கு வரும் வகையில் மீள் அறிவித்தல் வரையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் யாகொடவில் இருந்து வந்துரவ வரையிலான எந்தவொரு ரயில் நிலையங்களிலும் ரயில்கள் நிறுத்தப்படமாட்டாது என அந்த திணைக்களம் அறிவித்துள்ளது.

# கொழும்பு பங்குச் சந்தை சரிவை சந்தித்துள்ளது!

பல நாட்களாக சாதகமான வளர்ச்சியைக் காட்டிய கொழும்பு பங்குச்சந்தை இன்று சரிவை சந்தித்துள்ளது. இதன்படி, அனைத்து பங்கு விலை குறியீடு 7.65 சதவீதம் சரிந்து 462.99 புள்ளிகளாக காணப்பட்டுள்ளது.

இன்றைய நாள் முடிவில் அனைத்து பங்கு விலைக் குறியீடும் 5587.18 புள்ளிகளில் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் S&P குறியீட்டு எண் 165.92 புள்ளிகளாக சரிந்து 2288.51 ஆக முடிந்தது. இது 676 சதவீதம் குறைந்துள்ளது.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மார்ச் மாதத்தில் தற்காலிகமாக மூடப்பட்ட கொழும்பு பங்குச் சந்தை 2020 மே முதல் வழக்கமான நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முகக்கவசம் அணியாதோர் தனிமைப்படுத்தப்படுவர்




முகக்கவசம் அணிய மறுப்போர் யாராக இருந்தாலும் அவர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்று இராணுவத்தினர் எச்சரித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை சவளக்கடை சம்மாந்துறை மத்திய முகாம் அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் இன்று(6) காலை முதல் வீதியால் வருவோர் இடைநிறுத்தப்பட்டு முகக்கவசம் அணிந்து செல்லுமாறு இராணுவத்தினரால் அறிவுறுத்தப்பட்டனர்.

இவ்வாறு முகக்கவசம் அணியாது செல்பவர்கள் அடையாளம் காணப்பட்டு சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாவார்கள் எனவும் நாட்டின் நலனை கருத்தில் கொண்டு பாதசாரிகள் வாகன உரிமையாளர்கள் பேருந்தில் பயணிப்பவர்கள் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என கேட்டுள்ளனர்.

இதே வேளை வீதியில் முகக்கவசம் இன்றி பயணித்தவர்கள் நிறுத்தப்பட்டு முகக்கவசம் அணிந்து செல்லுமாறு பணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக வைத்தியசாலை வங்கிகள் அரச திணைக்களங்கள் பேருந்து நிலையங்கள் உள்ளிட்ட பொதுநிறுவனங்களில் தேவை நிமிர்த்தம் செல்லும் பொதுமக்கள் முகக்கவசங்களை அணிந்து வருமாறு மீண்டும் வலியுறுத்தி வருகின்றனர்.

# கிழக்கு பல்கலை மாணவர்கள் 16 பேர் சுய தனிமைப்படுத்தலில்


கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கற்கும் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த 16 மாணவர்கள், கொரோனா வைரஸ் பரவல் தொற்று முன்னெச்சரிக்கையாக சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் ஏ. லதாகரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பிள்ளையாரடி பிரதேசத்திலுள்ள கிழக்குப் பல்கலைக்கழக விடுதியில் நேற்று (திங்களன்று) மாலை, அவர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பணிப்பாளர் லதாகரன் மேலும் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம், தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது, "நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று அச்சம் காரணமாக, கிழக்கு மாகாணத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆகையால், மக்கள் பீதியடைய வேண்டிய அவசியமில்லை.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தில் இரண்டாம் வருடத்தில் கல்வி கற்றுவரும் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த 16மாணவர்கள், நீண்ட விடுமுறையில் வீடுகளுக்குச் சென்று, தற்போது பல்கலைக்கழகம் திரும்பியுள்ளனர்.

ஆகையால்தான் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவர்கள் தங்கியிருக்கும் மட்டக்களப்பு பிள்ளையாரடி பகுதியிலுள்ள பல்கலைக்கழக விடுதியில், அவர்களை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியுள்ளதுடன் அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது" என அவர் குறிப்பிட்டுள்ளார்.



# கொரோனா வைரஸைக் கண்டு அச்சப்பட வேண்டாம்

கொரோனா வைரசைக் கண்டு அமெரிக்கர்கள் அச்சப்பட வேண்டாம் என மருத்துவமனையிலிருந்து வெளியேறிய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், மேல் சிகிச்சைக்காக அலபாமா மாகாணத்தில் உள்ள வால்டர் ரேட் தேசிய இராணுவ மருத்துமனையில் இருந்து நேற்று (திங்கட்கிழமை) வெளியேறினார்.

இதன்பிறகு வெள்ளை மாளிகை திரும்பிய ட்ரம்ப், வெள்ளை மாளிகையின் தெற்கு பகுதியில் உள்ள ஸ்டேட்லே வெளிப்புற பகுதிக்கு வந்து ஊடகவியலாளருக்கு கை அசைத்தார். இதன்போது தனது முக்கவசத்தை கழற்றி தனது சட்டை பைக்குள் வைத்துக் கொண்டார்.

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த முகக்கவசம் அணிவது மிக அவசியம் என மருத்துவ வல்லுநர்கள் அறிவுறுத்தும் வகையில், தொற்று பாதித்த ட்ரம்ப் முகக்கவசம் அணியாமல் அலட்சியமாக இருந்தது சமூக வலைத்தளங்களில் விமர்சிக்கப்படுகிறது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### புங்குடுதீவு...

தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.அவர்களில் ஒருவருக்கு கோரோனா தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்ட நிலையில் அந்தப் பெண் புங்குடுதீவுக்குப் பயணித்த பேருந்தில் பயணித்த ஏனையோரை அடையாளம் காணும் நடவடிக்கைகளை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் முன்னெடுத்துள்ளனர்.

அதனால் புங்குடுதீவு ஊடாக குறிகாட்டுவானுக்கான பொதுப் போக்குவரத்து சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அதனால் மறு அறிவித்தல் நெடுந்தீவு மற்றும் நயினாதீவிலிருந்து குறிகாட்டுவானுக்கான படகுச் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### போலி முகநூல்களுக்கு...

செய்யமுடியும். 24 மணித்தியாலங்களில் அவர் யார் என கண்டறியப்பட்டு தகுந்த தண்டனை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### யாழில் தனியார்...

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் இன்று இடம்பெற்ற உயர்மட்டக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.

நாட்டில் கோரோனா வைரஸ் பரவல் ஏற்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர் க.மகேசன் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

கூட்டத்தில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர், மருத்துவர் த.சத்தியமூர்த்தி உள்பட துறைசார் அதிகாரிகளும் பங்கேற்றனர்.

### நிகழ்வுகள்...

அத்துடன் நாட்டில் தற்போது நிலவியுள்ள நிலைமையை கருத்தில் கொண்டு மக்கள் கொரோனா பரவை கட்டுபடுத்த ஒத்துழைப்பது மக்களின் பொறுப்பாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### கம்பஹா மாவட்டத்தில்...

பொலிஸ் பிரிவுகளில் மட்டும் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்த ஊரடங்கு கம்பஹா மாவட்டம் மேலும் 12 பொலிஸ் பிரிவுகளில் இன்று மாலை 6 மணி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

### பரீட்சைகள்...

நடத்துவதா இல்லையா என்பது தொடர்பில் நாளைய தினம் தீர்மானிக்கப்படும் என அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

எதிர்வரும் 11 ஆம் திகதி புலமை பரிசில் பரீட்சையும், எதிர்வரும் 12 ஆம் திகதி உ.த பரீட்சையும் நடத்துவதற்கு திர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### கொழும்பு மாநகர...

கொழும்பு மாநகர சபை பணியாளர் ஒருவரின் தாயாருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்ட நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

### கொரோனா கோரத்தாண்டவம்...

இந்நிலையில் அதன்பின்னர் 220 பேர் கொரோனா தொற்றாளர்களா அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில், இன்று காலை முதல் பரிசோதனை அடிப்படையில் கொரோனா தெற்றாளர்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்தது.

ஆடை தொழிற்சலையின் 39 வயதுடைய பெண் ஊழியர் கடந்த சனிக்கிழமை இரவு கொரோனா தொற்றுக்குள்ளாகியதாக அடையாளம் காணப்பட்டார்.

அதனையடுத்து அவரது மகளிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனைகளில் அவரும் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டிருந்தது.

அத்துடன் மீரிகம, குருணாகல், கட்டான, திவுலப்பிட்டிய, மொனராகலை, யாழ்ப்பாணம், சீதுவ, ஜா - எல, அம்பாறை, மகர ஆகிய பிரதேசங்களிலும் கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், கொரோனா வைரஸ் பரவலின் மூன்றாம் அலையாகவே தற்போதைய நிலைமை இலங்கையில் உருவாகியுள்ளது என பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்திருந்தார்.

தற்போது,அதிகரித்துவரும் கொரோனா தொற்று காரணமாக நிலைமையை கட்டுபடுத்தும் வகையில் கம்பஹா பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட கிரிந்திவெல, நிட்டம்புவ, தொம்பே, மினுவாங்கொடை, கணேமுல்ல,பூகொடை, மீரிகம மற்றும் வெயங்கொட உள்ளிட்ட 14 பொலிஸ் பகுதிகளில் இன்று மாலை 6.00 முதல் மறு அறிவித்தல் வரை பொலிஸ் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேலை இன்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில், இலங்கையில் கொவிட்-19 பரவலின் தற்போதைய நிலைமை குறித்து நாளைய தினமே முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும் என அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்திருந்தார்.

உயர்தரம் மற்றும் புலமைபரிசில் பரீட்சை தொடர்பான இறுதி தீர்மானத்தை கல்வி அமைச்சு நாளை வெளியிட உள்ளதாகவும், கொவிட்-19 பரவலை கட்டுப்படுத்த மக்கள் சுய சுகாதார கட்டுப்பாடுகளை பின்பற்றுதல் அவசியம் எனவும் அவர் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாண கரையோரத்தில் வசிக்கும் மக்கள் விழிப்பாக இருங்கள்

யாழ்ப்பாணத்தின் கரையோரப் பகுதியில் வாழும் மக்களை, மிகவும் விழிப்பாக செயற்படுமாறு யாழ்ப்பாண மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் செனரத் பண்டார தெரிவித்தார்

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா சமூக தொற்று தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் செனரத் பண்டார மேலும் கூறியுள்ளதாவது, "யாழ்ப்பாண குடாநாடானது பெருமளவு கடல் பிரதேசத்தை கொண்ட ஒரு பிரதேசமாகும்.

நமக்கு அண்மைய நாடான இந்தியாவில் அதிலும் தென்னிந்தியாவில் கொரோனா தொற்று மிகவும் அதிகளவில் காணப்படுகின்றது.

தென்இந்திய மீனவர்களின் வருகையின் காரணமாக வடக்கு பிரதேசத்தில் கொரோனா தொற்றுவதற்கு வாய்ப்பு அதிகமாக உள்ளது.

எனவே யாழ்ப்பாணக் குடாநாட்டின் கடற்கரையை அண்டியுள்ள பகுதியில் உள்ள மக்கள், இந்த விடயம் தொடர்பில் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

கடந்த சில நாட்களுக்கு முதல் பருத்துறை பகுதியில் இந்திய மீனவர்களுடன் தொடர்புபட்டவர்களை தனிமைப்படுத்தியுள்ளோம். ஆகவே அது போன்ற சம்பவங்கள் இனியும் இடம்பெறா வண்ணம் பொதுமக்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரைக்கும் யுத்தத்திற்கு முகம் கொடுத்து பல இன்னல்களை அனுபவித்த மக்கள், மீண்டும் கொரோனா தொற்று மூலம் பாதிக்காத வண்ணம் செயற்பட வேண்டியது அனைவரது பொறுப்பாகும்" என அவர் குறிப்பிட்டுள்ளார்.






## வவுனியாவில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பம்: குறித்த பகுதிக்குள் பிரவேசிக்க தடை!

வவுனியா தோணிக்கல் ஆலடிப் பகுதியில் வசிக்கும் குடும்பமொன்றினை அண்மையில் சந்தித்த ஒருவருக்கு கொரனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்தோடு குறித்த பகுதிக்குள் பிரவேசிக்க வேண்டாமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் புங்குடுதீவைச் சேர்ந்த பெண்ணொருவருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த பெண் வவுனியா ஆலடிப்பகுதியில் வசிக்கும் குடும்பமொன்றினை அண்மையில் சந்தித்து சென்றுள்ளார். இந்த நிலையில் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தோணிக்கல் ஆலடிப்பகுதியில் புகையிரத கடவைக்கு அருகாமையில் சிறிய கடையொன்றினை நடத்தி வரும் குடும்பமொன்றே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், அவர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனையும் இன்று இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்.பல்கலைக்கழகத்தில் கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கை




நாட்டில் எழுந்துள்ள கொரோனாப் பெருந்தொற்றுப் பரவல் அச்சுறுத்தல் தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஸ்திரமான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகத் துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தெரிவித்தார்.

நாட்டில் எழுந்துள்ள கொரோனாப் பெருந்தொற்றுப் பரவல் அச்சுறுத்தலையடுத்து, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி மீளாய்வு செய்வதற்கான கலந்துரையாடல் நேற்று மாலை, துணைவேந்தர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி, பதிவாளர், அனைத்துப் பீடங்களினதும் பீடாதிபதிகள், சிரேஷ்ட மாணவ ஆலோசகர், மாணவர் நலச் சேவைகள் உதவிப் பதிவாளர் உட்படப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பரிசோதனைகளை நெறிப்படுத்தும் வகையிலும், பீடாதிபதிகளை ஒருங்கிணைக்கும் வகையிலும், யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் சமுதாய மருத்துவத் துறையைச் சேர்ந்த மருத்துவர் எஸ். சுரேந்திரகுமாரன் செயற்படவுள்ளார் என்று துணைவேந்தர் மேலும் தெரிவித்தார்.

## 'முடக்கம்' மக்கள் பிழைப்புக்கு விதிக்கப்படும் அடக்குமுறை



'முடக்கம்' என்பது எளிதான முறையாக இருந்தாலும் அது இலங்கை மக்கள் பிழைப்புக்கு விதிக்கப்படும் அடக்குமுறையாக அமையும் என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றில் இன்று (செவ்வாய்க்கிழமை) காலை இடம்பெற்ற நிகழ்ச்சியில் இணைந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

கொரோனா தொற்றாளி அடையாளம் காணப்பட்டதுடன் உடனடியாக நாட்டை முடக்குவது முக்கியமானதல்ல எனவும் மாறாக குறித்த தொற்றாளியை இனங்கண்டு அதனூடாக சமூக பரவலை தடுப்பதே அவசியம் எனவும் இராணுவத் தளபதி கூறியுள்ளார்.

மினுவங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றிய பெண்ணுக்கு கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்டவுடன் மூன்று பொலிஸ் பிரிவுகளை உள்ளடக்கி பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்தப் பகுதிகளில் இருந்து அதிகமான மக்கள் வேலைக்கு வருவதனை கருத்திற்கொண்டே மூன்று பொலிஸ் பிரிவுகளுக்கு மாத்திரம் இவ்வாறு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியுடன் கலந்துரையாடிய பின்னரே அந்த பகுதிகளில் தொடர்ந்தும் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த ஆடை தொழிற்சாலையில் பணிபுரியும் 1400 பேரில் 495 பேரைத் தவிர ஏனைய அனைவரும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதியில் உள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏனைய 495 பேர் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் வசிக்கின்றனர் என்றும் எனவே அவர்களின் தொழிலை இடைநிறுத்தினால் பாதிப்பு ஏற்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் தொழிற்சாலை பகுதிகளை விட்டு வெளியேறியவர்கள் அனைவரும் அடையாளம் காணப்பட்டு நேற்றிரவு முதல் 125க்கும் மேற்பட்டவர்களை இராணுவத்தினால் பராமரிக்கப்படும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எஞ்சியவர்களில் பெரும்பாலானோர் இந்த பகுதியில் வசிக்கின்றனர் என்பதால், தாம் இது போன்ற ஒரு சூழ்நிலையில் முழு முடக்கத்தை அமுலாக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அதனை செய்வது மிகவும் எளிதானது என்றாலும் அது நாடு முன்னேறும் வழியாக அமையாது என்றும் இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.